2014 ஜூலை 18]

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் துணை மின் நிலையம் அமைக்க இருந்த இடம் பழங்குடியினருக்காக ஒதுக்கப்பட்ட இடம் என்று குறிப்பிட்டிருக்கின்றார். வருவாய்த் துறையும் மாற்று ஏற்பாடு செய்து வேறு நிலத்தை ஒப்படைக்கவில்லை என்றும் அவரே குறிப்பிட்டிருக்கின்றார். கேள்வியையும், பதிலையும் அவரே சொல்லி இருக்கின்றார். (குறுக்கீடு) வருவாய்த் துறையும் நிலத்தை ஒப்படைக்கவில்லை என்ற தகவலையும் நீங்களே சொல்லியிருக்கின்றீர்கள். தமிழ்நாடு மின்சார வாரியம், வருவாய்த் துறை அதிகாரியிடம் தொடர்பு கொண்டு, அங்கே துணை மின் நிலையம் அமைப்பதற்கான இடத்தை கையகப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு, அந்த இடத்திலே துணை மின் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கையை மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு எடுக்கும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

விவசாய மின் இணைப்பைப் பொறுத்தவரையில், அந்தந்தப் பகுதியில் உள்ள பதிவு மூப்பின் அடிப்படையில், அங்கே இருக்கின்ற மின் பளுவின் தேவையைக் கருத்தில்கொண்டு விவசாயிகளுக்கு சீராக மின் இணைப்புகள் தொடர்ந்து வழங்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 182, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**182—**

**பாலம்**

***4874—செல்வி கே. பாலபாரதி:**

மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் தொகுதி, திண்டுக்கல் ஊராட்சி ஒன்றியம், ஆத்துமரத்துப்பட்டி, முள்ளிப்பாடி கிராமங்களுக்கு இடையில் பாலம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி, நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.*

*திண்டுக்கல் ஒன்றியம், ஆத்துமரத்துப்பட்டி கிராமத்திற்குச் செல்லும் சீலப்பாடி கிராமச் சாலையில் கி.மீ.2/6-ல் சந்தானவர்த்தினி ஆற்றின் குறுக்கே பாலம் கட்டி முடிக்கப்பட்டு, 24-02-2014 அன்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கரங்களால் திறக்கப்பட்டு, பயன்பாட்டில் உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

**செல்வி கே. பாலபாரதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நன்றி. அந்தப் பாலம் திறக்கப்பட்டு செயல்பட்டுக்கொண்டிருக்கின்றது. முள்ளிப்பாடி கிராமத்திற்கு திருச்சி சாலையிலிருந்து செல்லக்கூடிய வழியிலும் சந்தானவர்த்தினி ஆறு மிகப் பெரிய சிரமத்தைத் தந்துகொண்டிருக்கின்றது. யாராவது ஒருவர் இறந்தால்கூட அவர்களை கல்லறைக்கு எடுத்துச் செல்வதற்கு அந்த சந்தானவர்த்தினி ஆற்றைக் கடந்து செல்ல வேண்டியிருக்கின்றது. ஆகவே திருச்சி சாலைக்கும் முள்ளிப்பாடி கிராமத்திற்கும் இடையில் இன்னும் ஒரு பாலம் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறுதுறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய நெடுஞ்சாலை எண் 45-ல் கி.மீ.414/6-லிருந்து முள்ளிப்பாடி கிராமத்திற்குச் செல்லும் சாலை திண்டுக்கல் ஊராட்சி சாலையாகும். 0/0 கி.மீட்டரிலிருந்து 0/6 கி.மீ., அதாவது 600 மீட்டர் தூரத்திலே 0/4 கி.மீட்டரில் சந்தானவர்த்தினி ஆற்றின் குறுக்கே ரூ.230 இலட்சம் செலவில்*

2014 ஜூலை 18]

உயர்மட்டப் பாலம் கட்டுவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, அது தற்போது பரிசீலனையில் உள்ளது. ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்ட பிறகு, அந்தப் பணி துவங்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.*

**செல்வி கே. பாலபாரதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன் அவர்கள்.*

**திரு. ம. குணசேகரன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களை வணங்குகிறேன். சுதந்திரப் போராட்ட தியாகிகளுக்கும், தமிழ் அறிஞர்களுக்கும், தமிழக மக்களுக்காகத் தொண்டாற்றிக் கொண்டிருக்கின்ற பெரியவர்களுக்கும் மரியாதை செலுத்துகின்ற வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் மணிமண்டபம், நினைவுத் தூண்கள் அமைத்துக் கொண்டிருக்கின்ற நிலையில், கடந்த சட்டமன்றக் கூட்டத் தொடரில், எங்களுடைய சிவகங்கை மாவட்டத்தில் வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கு நினைவு மண்டபம் எழுப்ப வேண்டுமென்று கேட்டவுடன், மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவிப்பு செய்திருந்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் இன்றைக்கு வீரமங்கை வேலுநாச்சியார் அவர்களுக்கும், தியாக மங்கை குயிலி அவர்களுக்கும் மணிமண்டபத்தையும், நினைவுத் தூணையும் எழுப்பி, இந்த நாட்டு மக்களுக்கு அர்ப்பணிப்பு செய்ய இருக்கின்றார்கள். அதற்காக எங்களுடைய சிவகங்கை மாவட்ட மக்களின் சார்பாகவும், சிவகங்கை மாவட்ட அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாகவும், என்னுடைய தொகுதியின் சார்பாகவும், என் சார்பாகவும் மாண்புமிகு இதய தெய்வம் தமிழ்நாடு*

முதலமைச்சர் அம்மா அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிவகங்கை மாவட்டம், மானாமதுரையில், காவல் நிலையத்திற்கும், கிருஷ்ணராஜபுரம் தெருவிற்கும் இடையில் ஒரு பாலம் வேண்டுமென்று நெடுங்காலமாக அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை வைத்திருக்கின்றார்கள். அந்தக் கோரிக்கையை நிறைவேற்றும் வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருணை உள்ளத்தோடு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்கு எடுத்துச் சென்று, அந்தப் பாலத்தைக் கட்டித் தர வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலை மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டிய பகுதியில் நிதிநிலைக்கேற்ப அரசு ஆய்வு செய்து ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 183, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**183—**

### வாசனை திரவியத் தொழிற்சாலை

***21276—திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டம், தோவாளை பகுதியில் வாசனை திரவியத் தொழிற்சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. ப. மோகன், ஊரகத் தொழில் மற்றும் தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,